Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 — இதழ் 74

National Tamil Daily — தேசிய தினசரி

(26-4-65)

விசுவாவசு சித்திரை 14 துல்ஹஜ் பிறை 23 திங்கட்கிழமை

**ஈழநாடு**

**சந்தா விபரம்**

**இந்தியா – இலங்கை**

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |




# வடபகுதியின் பிரச்னைகள்

## மந்திரிகூட்டும் முக்கிய மகாநாடு

### வடபகுதி எம். பி. க்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதியின் முக்கிய பிரச்னைகள் பற்றியும் அவசரப் பிரச்னைகள் பற்றியும் ஆராய்ந்து அவற்றுக்குப் பரிகாரம் காணுவதற்கு எவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதுபற்றி ஆராயும்பொருட்டு உள்நாட்டுமந்திரி டாக்டர் டபிள்யு. தகநாயகா அடுத்தமாதம் 5-ம் திகதி ஒரு மகாநாட்டைக் கூட்டுகிறார்.

இந்த மகாநாட்டுக்கு வடபகுதித் தொகுதி எம். பி. ககள் அனைவரையும் அவர் அழைத்துள்ளார்.

இதுபோன்று கிழக்குமாகாண பிரச்னைகள் பற்றி கிழக்குமாகாண எம். பி.க்களையும் அவர் அழைத்து ஆலோசனைசெய்யவிருப்பதாக அறியப்படுகிறது.

## "ஐ. நா. வில் சேர சீனு வற்புறுத்தாது

### வேறு ஒரு உலக ஸ்தாபனம் அமைக்கப்படும்" —சூ-என்-லாய்

ஜாகர்த்தா, ஏப். 25

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தைப் போல் வேறு ஒரு உலக ஸ்தாபனத்தை அமைக்கப்போவதாக சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவில், திரு. சூ-என்-லாய் பத்திரிகைநிருபருக்கு அளித்த பேட்டியில் இந்த விபரத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

ஐ. நா. வில் ஒரு உறுப்பு நாடாக சேர்வதற்கு கம்யூனிஸ்ட் சீனு வற்புறுத்தாது என்றும் திரு. சூ-என்-லாய் தெரிவித்துள்ளார். சீனு, வடகொரியா, கிழக்கு ஜெர்மனி, இந்தோனேஷியா மற்றும் சில நாடுகளுக்கிடையே ஒருமைப்பாட்டை வளர்க்க முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## "உரிமைகளைப் பெற பதவியேற்றேன்

### பூசல்களைமறந்து நாட்டுக்காக உழைப்போம்" —திருச்செல்வம்

சுழிபுரம், ஞாயிறு

"தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ளவும், தமிழரசுக்கட்சியின் இலட்சியத்துக்காகவும் நான் மந்திரிப்பதவியை ஏற்றுளேன். இன்றுள்ள நிலையில் நாம் சகல பூசல்களையும் மறந்து நாட்டு முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டும்" என உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். சித்தங்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற விழாவுக்கு கழகத் தலைவர் செல்வன் தெட்சணாமூர்த்தி தலைமை வகித்தார். திரு எம். திருச்செல்வம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நாம் ஒருவருக்கும் அஞ்சத் தேவையில்லை. எல்லோருடனும் தொடர்புகொள்ளவும் எவற்றைச் செய்யவும் முன்வரவேண்டும். நம்மவர்கள் வேலை தேடி முன்பு தென்னிலங்கைக்கும் வேறு நாடுகளுக்கும் சென்றார்கள். இன்று நிலைமை மாறிவிட்டது. வேலை இல்லாத்திண்டாட்டம் எங்கும் தாண்டவம் ஆடுகின்றது. பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலையின்றி அல்லல்படுகின்றார்கள். இந்தப் பிரச்சனையை எப்படிப் போக்கலாம் என்று ஆலோசனைசெய்து வருகின்றோம். நாம் எமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப்பாடுபட வேண்டும். அதற்குரிய வழி மக்கள் சக்தியை நன்குபயன்படுத்துவதுதான். ஜப்பான் நாட்டை பொன்கொழிக்கும் நாடாக்கியது மக்கள் சக்திதான்.

**மாகாணங்களில் வாய்ப்புண்டு**

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் எப்படி வட, கிழக்கு மாகாணத்துக்குள் மட்டும் முன்னேறலாம் என்று சிலர் கேட்கின்றார்கள். தமிழ் பேசும் இனம் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள நிலங்களையும் மற்றும் மூலப்பொருள்களையும் நன்கு பயன்படுத்த தமது சக்தியைச் செலவுசெய்வார்களானால் இதர ஏழு மாகாணங்களிலும் பார்க்க அதிகம் முன்னேறலாம். எமது அரசாங்கம் மின்சார சக்தியை எப்படியும் எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. மின்சக்தியை நன்கு பயன்படுத்துவதன் மூலம் எமது தேவைகள் பலவற்றைப் பூர்த்தியாக்கலாம். எமது இடங்கள் கடலால் சூழப்பட்டதால் கடற்தொழிலை நன்கு விருத்தி செய்வதன் மூலம் நாம் வருமானத்தை அதிகரிக்கலாம். சாதியால் வகுக்கப்பட்ட தொழில்களையும் எம்மவர்களில் ஒரு பகுதியினரை சிறுபான்மையினர் என்று பாகுபடுத்திக்காட்டுவது மிகவும் இழிவான செயலாகும். எல்லோரும் ஒன்றுபட்டு தமது பொருள் வளத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். சிறுபான்மைத்தமிழர் என்று தாமே கூறிக்கொண்டு இருப்பதால் பயனில்லை, நாம் எல்லோரும் ஒன்று என்பதை மறக்கக்கூடாது; எமது வாலிபர்கள் பாரம்பரியமான நிலையிலிருந்து ஒரு மாற்றமான பாதையில் செல்லவேண்டும்: எந்த விதமான கஷ்டங்கள் வந்தாலும் தயங்காது தமது வாழ்வை முன்னேற்றவேண்டும், தமது சக்திக்கு ஏற்ற திட்டங்களை உருவாக்கி வாழ்வைச் செப்பனிடவேண்டும், எமது முதாதையர்கள் காட்டிய பாதையில் இருந்து புதிய திருப்பம் ஒன்றை நாம் காணவேண்டும்,

நியாயதுரந்தரர் திரு. மு. சு. சுப்பிரமணியம் பேசுகையில், அன்பு மார்க்க ... கை பூரவும் எமக்கு ... ர்புவேண்டுமென்றும்தற்போது ஏற்பட்ட ஒற்றுமை எமக்கு என்றும் தேவையென்றும் கூறினர்.

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

எமது சமுதாயம் கடந்த நூற்றி ஐம்பது வருடங்களாக எந்த வாழ்க்கையைச் சரி என்று கருதிவந்ததோ இன்று அதை எல்லாம் மாற்றி அமைக்கவேண்டியவர்களாக உள்ளோம், எமது வாலிபர்கள் ... உத்தியோகம் பார்க்கவும் ...

(6-ம் பக்கம் பார்க்க)

## கிளர்ச்சி தோல்வி

### டொமினிக்கன் குடியரசில்

லண்டன், ஏப். 25

டொமினிக்கன் குடியரசில் கிளர்ச்சி நடைபெற்றிருப்பதாகவும் ஆனால் இது முறியடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க வானொலி நிலையத்தை கிளர்ச்சிக்காரர்கள் கைப்பற்றிவிட்டனர் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்நிலையம் பின்னர் மீட்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் பொலிஸாருக்கும் மாணவர்களுக்குமிடையே கைகலப்புகள் ஏற்பட்டுள்ளன, பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. நாட்டில் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது. கிளர்ச்சிக்காரர்கள் உடனடியாக சரணடைய வேண்டுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது. பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## முப்படைகளும் தயாராய் இருக்க பாகிஸ்தான் உத்தரவு

### புதிய தாக்குதல் வரும்

புதுடில்லி, ஏப்ரல் 25

கஞ்சர் கோட்டிலிருந்து 50 மைல் கிழக்கே இந்திய எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய பாகிஸ்தானிய துருப்புக்கள் இப்போது எல்லைக்கப்பால் விலகிச்சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இப்பகுதியில் ஒரு கம்பெனி கொண்ட சிறிய அளவு இந்திய வீரர்களை ஒரு பிரிகேட் கொண்ட பெரிய பாகிஸ்தான் படை தாக்கியதால் பின்வாங்கவேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் விலகிச்சென்று புதிய தாக்குதலுக்கு ஆயத்தம் செய்யக்கூடும் என இங்கு கருதப்படுகிறது. பாகிஸ்தானின் ஒரு டிவிஷன் படைகள் இப்பகுதியில் இருப்பதாயும், கனரக பீரங்கிகள், டாங்கிகளுடன், ஒரு கவச மோட்டார் பிரிவும் இருப்பதாயும் தெரிகிறது. கச்லைவில் பாகிஸ்தானுக்குச் சொந்தமான பெரிய விமான நிலயம் ஒன்றும் இருக்கிறது.

இதற்கிடையில் தமது படைகளைத் தயாராய் இருக்குமாறு பாகிஸ்தான் உத்தரவிட்டிருக்கிறது. படையினரின் விடுமுறை ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. விடுமுறையிலிருக்கும் ராணுவத்தினர் திரும்ப சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். முப்படையிலுள்ள ரிசேர்வ் வீரர்களும் சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். கிழக்கு பாகிஸ்தானிலும் இவ்வாறு படைகளுக்கு உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சிந்த பஞ்சாயில் பாகிஸ்தான் ராணுவம் தீவிரபயிற்சியில் ஈடுபட்டிருக்கிறது. இந்தியா பாகிஸ்தானின் நடவடிக்கைபற்றி சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அறிவித்திருப்பதாய்க் கூறப்பட்டது.

---

## செக். தேசியதினம்

யாழ்ப்பாணம், திங்கள்

"செக்கோஸ்லோவேக்கியா தனது 20-வது தேசிய தினத்தை இப்பொழுது கொண்டாடுகின்றது. 1945-ல் மக்கள் விடுதலைபெற்று, செக்கோஸ்லோவகிய மக்கள் வாழ்க்கையில் புதிய சகாப்தம் தோன்றியது. அன்றுமுதல் செக்கோஸ்லோவேக்கியாவை சோஷலிஸ முறையில் முன்னேற்ற மக்கள் உறுதி கொண்டனர்" என்று செக். தேசியதினத்தை முன்னிட்டு சுருவில் பட்டி கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற கண்காட்சி வைபவத்தில் கலந்துகொண்ட செக். ஸ்தானிகராலய அதிகாரி திரு. பிருன்ரிசிக் பினானர் பேசுகையில் கூறினர். கண்காட்சியை மட்டிவிட்டி கிராமசபைத் தலைவர் திரு சி அருணாசலம் ஆரம்பித்துவைத்தார்.

கண்காட்சி நேற்றும் நேற்று முன்தினமும் திறந்துவைக்கப்பட்டது. இலவச செய்திப்படமும் காண்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மி... ஜூவுல்ளவர்களுக்கு எவ்வளவு உரிமையும் சந்தர்ப்பமுமுண்டோ அவ்வளவு விசுப் பலவீனர்களுக்குமிருக்க வேண்டும். ஜனநாயகத்தைப்பற்றி இதுவே என் கருத்து.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 280

ஈழ... விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 14 உ (26-4-65)

## புதிய வழி

"எமது கட்சிக்குப் பூரண பெரும்பான்மைப்பலம் கிடைக்காததும் அதன்மூலம் தேசிய அரசாங்கம் அமைக்க வாய்ப்புக் கிடைத்ததும் நான் பெற்ற பெரும் பேறாக கருதுகிறேன்" என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா சென்ற வெள்ளிக்கிழமை ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறினார். புதிய அரசாங்கத்தின்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பிரதமரின் பேச்சு அதிகரிக்கச் செயவதாகவுள்ளது.

சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் பலரும் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்தனர் விவாதம் சில கட்டங்களில் காரசாரமாகவும் சுவையாகவுமிருந்தது. எதிர்க்கட்சியினர் பலர் அரசாங்கக்கட்சியினர் மீதும் அரசாங்கக்கட்சியினர் பலர் முன்னைய அரசாங்கத்தினரான இன்றைய எதிர்க்கட்சியினர்மீதும் எதிர்பார்க்கப்பட்டதுபோல் குற்றம்சுமத்தினர். எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஓரிரண்டு பிரதிநிதிகள் துரதிர்ஷ்டவசமாக வகுப்புவாத ரீதியில் பேசினர். என்றாலும் இப்பேச்சுக்கு எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவரே கடச்சுடப் பதிலளித்ததும் அரசாங்கக் கட்சியினர் வகுப்புவாதத்துக்கு இனி இங்கு இடமில்லையென்று திட்டவட்டமாக எடுத்துக்காட்டியதும் நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்துவதாக இருந்தது. எதிர்க்கட்சியிலும் அரசாங்கக்கட்சியிலுமுள்ள அரசியல் கட்சிகளின் பொறுப்புவாய்ந்த தலைவர்கள் வகுப்புவாதக் கூச்சலுக்கு இடம் கொடுக்காமல் நிதானமாக நடந்து கொண்டதும் மக்களுக்கு ஆறுதலளிப்பதாகும்.

இந்த விவாதத்தில்மொழிப் பிரச்னையும் இந்திய வம்சாவளியினர் பிரச்னையும் தலைதூக்கியதென்றாலும் இப்பிரச்னைகளுக்கு நிரந்தரமான சுமுகமான தீர்வு காண்பதே தங்களது நோக்கம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பொறுப்புவாய்ந்த கட்சித்தலைவர்கள் தெளிவாகத் தெரிவித்துவிட்டனர். அரசாங்கத்தின் முற்போக்கான கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் தாமும் இதர எதிர்க்கட்சிகளும் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா சபையில் அறிவித்திருந்தார். முற்போக்குக் கொள்கைகளை நிறைவேற்றவும் மொழிமற்றும் தேசியப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும் எதிர்க்கட்சியினர் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கத் தயாராக இருக்கின்றனர் என்பது சிம்மாசனப்பிரசங்கத்தின் போது நடைபெற்ற விவாதத்திலிருந்து தெளிவாகியுள்ளது. இதேசமயம் சிறுபான்மையினரின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட்டால்தான் நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட முடியுமென்பதையும் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் மட்டுமன்றி நாட்டுமக்களும் உணர்ந்து கொண்டுள்ளனர்.

இலங்கையைக் குடியரசாக்குவதுபற்றியும் மற்றும் சில அம்சங்கள்பற்றியும் ஆராய்ந்து அரசியல் சாஸனத்தைத் திருத்துவது பற்றி சிபார்சு செய்ய பார்லிமெண்டின் இரு சபைகளைக் கொண்ட ஒரு தெரிவுக் கமிட்டியும் நியமிக்கப்படவிருக்கிறது.

இந்நிலையில் எதிர்க்கட்சியினர் அளிக்க முன்வந்துள்ள ஆதரவையும் ஒத்துழைப்பையும் பயன்படுத்த யாழ்ப்பாணப் பிரதிநிதி பார்லிமென்டில் கூறியதுபோல் சகல கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டி மொழி மற்றும் தேசியப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் முயற்சி செய்வது நற்பயனளிக்கலாம். அல்லது சகல கட்சிப் பிரதிநிதிகளையும் கல்விமான்கள், சட்டவல்லுனர்கள், சமூகசேவைப் பிரதிநிதிகள் ஆகியோர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையை அமைத்து சிறுபான்மை இனத்தவருக்குப் பாதுகாப்பளிக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய அம்சங்களை உள்ளடக்கும்வகையில் அரசியல் சாஸனத்தைத் திருத்தமுயற்சி செய்தால் நாட்டின் சரித்திரமே மாறும், நாடும் புதிய திசையில் காலடி எடுத்து வைத்து முன்னேற்றப்பாதையில் செல்ல வழிபிறக்கும்.

# ஈழநாடு தந்த இலக்கணச் சுவாமிகள்

— பொன். முத்துக்குமாரன் —

சைவத்துக்கும், தமிழுக்கும் அளப்பெரும் தொண்டாற்றிய ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் என்னும் இலக்கணச் சுவாமிகளின் குருபூசை இன்று அவிட்ட நட்சத்திரத்தில் வருகிறது. தமிழ்நாட்டில் சிறப்பாகச் சிதம்பரத்தில் இன்று இலக்கணச் சுவாமிகளின் குருபூசைத் தினம் பக்திசிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது. ஞானப்பிரகாச முனிவர், ஆறுமுகத்தம்பிரான் போன்ற பெரியோர்களின் பரம்பரையில் வந்தவர்கள் சுவாமிகள். அவர்களைப் போல் ஈழநாட்டிலிருந்து தமிழ்நாடு சென்று அங்கு நிரந்தரமாக வசித்து, சைவத்துக்கும், தமிழுக்கும் நிலைபேறான தொண்டுகள் புரிந்துவந்துள்ளார்கள். உலகப் பற்றற்ற மகாதுறவியெனச் சைவமக்களால் சிறப்பாகவும், தமிழ் மக்களால் பொதுவாகவும் கொண்டாடப்பெற்றுவந்த ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளின் குருபூசைத் தினத்தையொட்டி அவருக்கு அஞ்சலி செய்யுமுகமாக இக்கட்டுரை வெளியிடப்பெறுகிறது.

மாசில்லாத அழகிய தோற்றம், விரதங்களால் மெலிந்த திருமேனி, காமம், வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்



களையும் வென்ற தூய உள்ளம், எல்லா நூல்களையும் கற்று வல்ல அறிஞர்களும் அளவிட்டறியமுடியாத கல்வியறிவு, கற்றவர்கட்கெல்லாம் இவரே மேலானவர் எனும் தலைமை, நல்லொழுக்கநெறி வடிப்பட்டு நிற்றலாலுண்டாய மெய்யறிவு, துன்பமென்பதே அறியாத இன்ப இயல்பு-இவ்வாறான இலக்கணங்களை உடையவர்கள் திருவாவினன்குடியிலுள்ள முருகப்பெருமானை முடபோதும் வழிபடும் முனிவர்களாவர் என நக்கீரப் பெருமான் திருமுருகாற்றுப்படையில் கூறியுள்ளார். அவ்வாறான இலக்கணங்களையே கொண்டமைந்த முனிவர் ஒருவர் தில்லையிலுள்ள சிவஞானத்திருத்தளியில் இந்த நூற்றாண்டில் எழுந்தருளியிருந்து சிதம்பரத்திலுள்ள நடராசப் பெருமானை முடபோதும் வழிபட்டுவந்தார். அம்முனிவரவர்களில் இலக்கணச் சுவாமிகள் என அறிஞர்களால் போற்றிக் கூறப்படும் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் அவர்களேயாவர்.

நாவலர்பெருமானின் முன்னோருள் ஒருவரான ஞானப்பிரகாச முனிவரைப் போல இலக்கணச்சுவாமிகளும் தமது இளமைப்பருவத்திலேயே துறவுள்ளத்தினராய் தென்னிந்தியாவுக்குச் சென்றார்கள். மாதவச்சிவஞான யோகிகளைப்போல சுவாமிகள் தமிழிலக்கிய இலக்கணங்களையும் வடமொழி இலக்கண இலக்கியங்களையும் துறைபோகக் கற்று, மிக்குயர்ந்த நிலையில் மேலான புலமை பெற்றார்கள். கருவி நூலாகிய அவற்றின் அவ்வாறு தேர்ந்து நுண்மாண் நுழைபுலம் உடையராகி பின்னர், ஆன்மா ஈடேற்றத்திற்குரிய வைதிகமாகிய வேதங்களையும், ஆகமங்களையும் மெய்கண்ட சாத்திரங்களையும் திருமுறைகளையும் ஆராய்ந்து தெளிந்து கற்றுக் கேட்டு மெஞ்ஞானத்தைப் பெறுதற்குரிய ஞானசாதனையில் ஈடுபட்டார்கள். இதனையுணர்ந்த சுவாமிகளிடத்தில் மெய்யுணர்வு தலையாய சிவ... தமிழ்... ஞான... உள்ள... கிய ஞானவிளக்கம் மெஞ்ஞானத்தில் ஆர்வமுடையார் பலரையும் அவர்பால் ஈர்த்தது. சித்தாந்த சரபம் என விருதுபெற்ற ஞானச்செல்வராகிய பழனி ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார், சிவககவிமணி வி.கே. சுப்பிரமணியமுதலியார் முதலாம்பெரியோர்கள் சுவாமிகளுக்கு மாணவராகிச் சித்தாந்த நூல்களைக் கற்றுத் தெளிந்தனர். மற்றும் பலர் தமிழிலக்கண இலக்கியங்களை சுவாமிகள்பால் ஐயந்திரக் கற்று அறிஞர்களாயினர். இவ்வாறு சுவாமிகள் அறிஞர்களுக்கெல்லாம் ஆசிரியராய், பரமாசாரியர் எனப் போற்றப்பட்டார்கள்.

சுவாமிகள் தம்மை நாடிவந்தவர்க்கு ஞானபோனகம் அளித்து அவர்களை மாசுஅற்ற சிறந்தவரென மதிக்கவைத்ததோடு தம்காலத்தும் பிற்காலத்தும் மக்களுக்கு அறிவு விளக்கம் ஆக்கவல்ல நூல்களைப் பதிப்பித்தும் தொகுத்தும் சேவை உதவியும் அரும்பணிபுரிந்தார்கள். சைவர்கள் மக்களது கண்ணுக்கும் கைக்கும் எட்டாத மறைபொருளாயிருந்தும் கற்றவர் விரும்பும் ஞான பொக்கிஷமாய் விளங்கி தும்பிய சிவஞானபோதமாபாடியமென்னும் அரிய சிவஞான நூலை முதன்முதலில் அச்சில் பதிப்பித்து அனைவரும் பெற்றுக் கற்றுய்யுமாறு வெளியிட்டமகோபகாரம் புரிந்தவர் சுவாமிகளேயாவர்.

சுவாமிகளுடைய நீண்ட வாழ்க்கை இரண்டு இனிய செயல்களையன்றி வேறு அறியாதது ஒன்று சிதம்பர நடராசப்பெருமானை, காலை நண்பகல், மாலை என்னும் காலந்தோறும் வழிபட்டின்புறுதல். மற்றையது தம்மை வந்தடைந்தவரது தகுதிக்கேற்ப அறிவு வழங்கி நல்வழிப்படுத்தல். நம் நாட்டில் அறிவும் நல்லொழுக்கமும் ஞானிகள்வாயிலாகவே தொன்றுதொட்டு நாட்டப்பட்டும் உறுதிப்படுத்தப்பட்டும் வந்துள்ளன, ஆதிகாலத்தில் இருடிகள், முனிவர்கள் வாழ்ந்து அறிவுச்செல்வத்தையும் ஒழுக்கச் சிறப்பினையும் வளர்த்தார்களெனப் புராண இதிகாசங்கள் கூறுகின்றன அத்தகைய முனிவர் இந்த நூற்றாண்டில் அண்மைக் காலத்தில் வாழ்ந்தாரென்பதை உணரும்போது நாம் பெருமையடைகிறோம். அந்த முனிவர் நம் ஈழநாட்டு வண்ணார்பண்ணையில் அவதரித்தவரென்பதை அறியும்போது பெருமிதமும், பெருமகிழ்வும் அடைவோம்.

## சனசமூக நிலைய திறப்புவிழா

வேலணை, ஞாயிறு சரவணை மேற்கிலுள்ள முதலாம் வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள சனசமூகநிலையத்தை திரு. க. அருணம்பலம் அண்மையில் திறந்துவைத்தார்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: பொ. சிற்றம்பலம், உபதலைவர்: க. பாலசிங்கம், காரியதரிசி: ப. சுப்பிரமணியம், உபகாரியதரிசி: மா. தேவராசா, பொருளாளர்: அ. தெட்சணாமூர்த்தி, உப பொருளாளர்: பொ. குணரெத்தினம் மற்றும் ஆ. குணநாயகம், த. சோமசேகரம், வை. சண்முகம், த. திருநீலகண்டன் ஆகியோரைக் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## வீட்டுக்கு தீ வைத்த வழக்கு

### மேல் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

காங்கேசன்துறை, ஞாயிறு பளைவீமன்காமத்தைச் சேர்ந்த செ. கந்தசாமி, க. முத்துத்தம்பி, க. பொன்னையா ஆகியோர் அங்குலரைச் சேர்ந்த கே. ரி. இராசதுரை என்பவருக்குச் சொந்தமான வீட்டுக்குத் தீ வைத்தார்களெனவும், அவருடைய வளவிலுள்ள வேலிகளைச் சேதப்படுத்தினர்களெனவும் அவர்களுக்கெதிராக காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு கீழ்க்கோர்ட்டு விசாரணை முடிவடைந்து மேல் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப் பட்டுள்ளது.

மல்லாகம் நீதிபதி திரு. ஜி எப் எச் அத்துறுப்பானே மேலே குறிப்பிட்ட மூன்றும் எதிரியாகிய க பொன்னையா வுக்கெதிராகச் சாட்சியமில்லையெனக் கூறி அவரை விடுதலை செய்து, மற்ற இரு எதிரிகளையும் மேல்கோர்ட்டு விளக்கத்துக்குப் பாரப்படுத்தினர்

மைக்கேல் பெர்னாந்து என்னும் ஒரு ஜீப் சாரதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

தான் தனது முதலாளிக்குச் சொந்தமான ஒரு வளவிலுள்ள ஓலைவீட்டில் இன்னொரு கார்ச்சாரதியுடன் தங்கியிருந்ததாகவும் சம்பவம் நடந்த அன்று இரவு 11 மணியளவில் மூன்று எதிரிகளும் கத்தி, கோடரி முதலிய ஆயுதங்களுடன் வந்து தங்களைப் பயமுறுத்தியதாகவும் தான் தன் வெளியே வந்தவுடன் அங்கே எரிந்து கொண்டிருந்த விளக்கை எடுத்து அதற்குள்ளிருந்த எண்ணெயைக் கூரையில் ஊற்றித் தீ வைத்ததாகவும் கூறினர். எதிரிகளுக்கும் எனது முதலாளிக்கும் எங்களில் பகையுண்டென்றும் குறிப்பிட்டார்.

மற்றொரு கார்ச்சாரதி எஸ் சூரியகாந்தி வீட்டுக்குச் சொந்தக்காரரான கே. ரி. இராசதுரையும் சாட்சியமளித்தார்கள்.

திரு அ குமரகுரு காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிவபாதத்தின் அனுசரணையுடன் வழக்கை நடத்தினர் எதிரிகள் சார்பில் திரு க. குணரத்தினத்தின் அனுசரணையுடன் திரு கே வி என் சண்முகநாதன் ஆஜரானர்

கிளிநொச்சி

## ரயில் நிலைய அபிவிருத்தி

### மந்திரியை எம். பி. சந்தித்தார்

மீசாலை, ஞாயிறு கிளிநொச்சி புகையிரத நிலையத்தின் அபிவிருத்தி வேலைகள் குறித்து கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அண்மையில் போக்குவரத்து மந்திரி திரு ஹலகேயைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதன் பயனாக இப்புகையிரத நிலையம் விரைவில் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றது.

நாட்டின் பல பகுதிகளில் புகையிரத நிலயங்கள் சீர்கேடான நிலையில் இருக்கின்றதென்றும் முதலில் கிளிநொச்சி புகையிரத நிலயத்தின் அபிவிருத்தி வேலைகளில் தாம் கவனம்செலுத்தப் போவதாகவும் எம்.பிக்கு மந்திரி உறுதி யளித்திருப்பதாகத் தெரியவருகிறது,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய-பாக். எல்லைச்சண்டை மோசமாகிறது

## டாங்கிகளை உபயோகிப்பதாக இந்தியா குற்றச்சாட்டு

### கஞ்சர் கோட்டில் புதிய தாக்குதல்கள்

புதுடில்லி, ஏப்ரல் 25

கஞ்சர்கோட்டிலிருந்து சிலமைல் தூரத்தில் பாகிஸ்தான் துருப்புகள் ஆத்திரமூட்டக்கூடிய மாதிரி பலத்த தாக்குதல்களை நடத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருபகுதியில் எல்லைக்குள் நுழைந்து பாகிஸ்தான் துருப்புகள் தாக்குதல் நடத்தி வருவதாக இந்தியா அறிவித்துள்ளது. கட்ச் பகுதியிலுள்ள இந்திய ராணுவநிலைகள்மீதும் பாகிஸ்தான் துருப்புகள் தீவிரமாகத் தாக்குதல்கள் நடத்திவருகின்றனராம்.

இந்திய-பாகிஸ்தான் எல்லைச்சண்டைகளில் பாகிஸ்தான் துருப்புகள் டாங்கிகளை உபயோகிக்கின்றனர் என்று இந்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. ஆனால் இதைப் பாகிஸ்தான் மறுத்துவிட்டது.

பாகிஸ்தான் துருப்புகள் உபயோகித்த டாங்கிகளில் மூன்றை இந்திய துருப்புகள் நாசப்படுத்திவிட்டன என்று இந்திய அரசாங்கம் இன்று அறிவித்தது.

தனது எல்லையென்று பாகிஸ்தான் கோராத பகுதிகளில் பாகிஸ்தான் துருப்புகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்றும் இந்தியா புகார் தெரிவித்துள்ளது.

**சண்டை தீவிரம்**

எல்லைப் பகுதிகளில் புதிய சண்டைகள் நடைபெறுகின்றன என்றும் தனது எல்லையோரங்களில் இந்தியா தனது துருப்புகளைப் பலப்படுத்தியிருக்கிறதென்றும் லண்டன் செய்திகள் கூறுகின்றன.

எல்லையோரங்களில் 3000க்கும் அதிகமான பாகிஸ்தான் துருப்புகள் டாங்கிகளின் உதவியுடன் சண்டை செய்துவருவதாக லண்டனிலிருந்து வெளியான செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தானின் புதிய நடவடிக்கைகள் நிலைமையைமோசப்படுத்தினாலும் இத்தாக்குதலை சமாளிக்கக்கூடிய திறமை இந்தியாவுக்கு இருக்கிறதென்று இந்திய பாதுகாப்பு இலாகா உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளனர்.

## 16,000 ஸ்டர்லிங் அபேஸ்

லண்டன், ஏப் 25

லண்டனில், முகமூடி அணிந்த எட்டுப்பேர், ஒரு தபால் வண்டியிலிருந்து 16,000 ஸ்டர்லிங் பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு தப்பி யோடிவிட்டனர்.

தபால் வண்டி சாரதியின் மீது "அமோனியா"வை தெளித்துவிட்டு அவருடன் இருந்தவரைத் தலையில் அடித்தார்களாம். அப்பொழுது வழியில் சென்றுகொண்டிருந்த ஒரு காரில் பிரயாணம் செய்தவர்கள் சாரதிக்கு உதவியளிக்க வந்தபோது கொள்ளைக் கூட்டத்தினர் அவர்களை பயமுறுத்தி பணத்தை எடுத்துக் கொண்டு வேறொரு வானில் தப்பி ஓடிவிட்டனராம்.

குறிப்பிட்ட வானின் இலக்கத்தை பொலிசார் குறித்தனர். கொள்ளைக் கூட்டம் இன்னும் பிடிபடவில்லை.

## போண்டாவுக்குள் சிலந்தி

சென்னை, ஏப் 25

கார்ப்பரேஷன் கட்டடத்திலுள்ள காண்டீனில் பரிமாறப்பட்ட போண்டாவுக்குள் இறந்த சிலந்தியொன்று கிடந்ததாம். இதனைத் தொடர்ந்து காண்டீனை மூடுமாறு சுகாதார அதிகாரி உத்தரவிட்டார்.

## விமானம் நொறுங்கியது

### விமானி குதித்து தப்பினர்

சென்னை, ஏப் 25

ஜலந்தருக்கு சமீபத்திலுள்ள கிராமத்தில் இந்திய விமானப்படையைச் சேர்ந்த விமானமொன்று நொறுங்கி விழுந்தது.

இந்த விமானத்திலிருந்த ஒரே நபர் குதித்துத் தப்பிவிட்டார். இவர் பயிற்சிக்காக இந்த விமானத்தை ஓட்டிச் சென்றார்.

## பிரதமருக்கு ஒத்துழைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை அரசாங்க சுகசேவை தமிழ்பேசும் தொழிலாளர்சங்கம் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளது.

தொழிலாளரின் நலன்களை பாதுகாக்க தேசிய அரசாங்கம் முழுமுயற்சி எடுக்கும் என்று இச்சங்கம் திடமாகக் கருதுகின்றது. நாட்டின் நலனை உத்தேசித்து தங்களுக்கும் தங்களது தலைமையிலுள்ள அரசாங்கத்துக்கும் பூரண ஒத்துழைப்பை அளிக்க இச்சங்கம் [illegible] என்று இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஷேக் அப்துல்லா இந்தியா திரும்புவார்?

### காஷ்மீர் செல்லஅனுமதி மறுக்கப்படலாம்

புதுடில்லி, ஏப. 25

காஷ்மீரின் முன்னாள் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லா சில தினங்களில் இந்தியாவுக்குத் திரும்புவார் என எதிர்பார்பார்க்கப்படுகின்றது. அவர் விரும்பியமாதிரி சில மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டாலும் அனுமதிக்கப்படாவிட்டாலும் அவர் சில தினங்களில் இந்தியா திரும்புவாராம்.

இந்தியாவுக்கு திரும்பும் பட்சத்தில் ஷேக் அப்துல்லா ஜம்மு-காஷ்மீருக்கு செல்ல அனுமதிக்கப்படமாட்டார் என நம்பப்படுகிறது.

## செக்.தேசிய தினவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

செக்கோஸ்லோவேகியா நாட்டின் 20-வது தேசியதின விழா அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி நாட்டின் பலபகுதிகளிலும் கூட்டங்களையும் கண்காட்சிகளையும் நடத்த செக்கோஸ்லோவேகியா-இலங்கை நட்புறவுச்சங்கம் ஒழுங்குகள் செய்துள்ளது.

## பசுபிக் சமுத்திரத்திலிருந்து வந்த 60 அடி நீர்யானை

### கொழும்பு நூதனசாலைக்கு கொண்டுசெல்ல ஏற்பாடு

வவுனியா, சனி

பசுபிக் சமுத்திரத்திலிருந்து வந்ததாகக் கருதப்படும் அறுபது அடி நீளமான நீர்யானையொன்று முல்லைத்தீவு கரையோரப்பகுதியான கொக்குளாய் கடலில் இறந்துகிடக்கக் காணப்பட்டது. இந்த நீர் (கடல்) யானையை கொழும்பு நூதனசாலை அதிகாரிகள் நேற்று பார்வையிட்டனர்.

இந்த நீர்யானை, பிரசவத்திற்காக (உஷ்ணமுள்ள) இலங்கைக் கடல் நோக்கி வந்திருக்கலாம் என்றும் வரும் வழியில் மாண்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. நூதனசாலை அதிகாரிகள் இது பற்றி தெரிவிக்கையில் இலங்கை மக்கள் நீர்யானையின் எலும்புக்கூட்டையாவது முதற்தடவையாக பார்த்துவைக்க கொடுத்துவைத்திருக்கிறார்கள் என்று கூறினர். இதனை இங்கு நிலத்தில் பாதுகாப்புடன் புதைத்து வைத்திருந்த பின்னர் கொழும்பு நூதனசாலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க தாக்குதல் தொடருகின்றது

### "அபாயகரமான நிலைமை உருவாகிறது" —ருஷ்யபிரதமர்

சைகோன், ஏப். 25

வடக்கு வியட்னாமிலுள்ள இராணுவ நிலைகள் மீது அமெரிக்க விமானங்கள் நேற்று தாக்குதல்கள் நடத்தின.

வடக்கு வியட்னாமிலுள்ள போக்குவரத்து பாலங்கள் மீதும் சாலைகள் மீதும் 60 அமெரிக்க விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தி சேதப்படுத்தின. விமானங்கள் யாவும் பத்திரமாகத் திரும்பிவிட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

நேற்றையத் தாக்குதலின் போது ஐந்து அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தியதாக சோவியத் செய்தி ஸ்தாபனமான "டாஸ்" அறிவித்துள்ளது.

**அபாயகரமான நிலைமை**

தென் கிழக்கு ஆசியாவில் அபாயகரமான நிலைமை உருவாகி வருவதாக சோவியத் பிரதமர் கோஸிஜின் தெரிவித்துள்ளார். வியட்னாம் மக்களுக்கு ஆதரவளிக்க சோவியத் அரசாங்கமும் மக்களும் தயாராக இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொலை முயற்சி வழக்கு

காங்கேசன்துறை, ஞாயிறு

பலாலியைச் சேர்ந்த கே. ஜே. பீற்றர் என்பவர் அதே ஊரைச்சேர்ந்த இராயப்பு அருமைநாயகம் என்பவரைக் கொலை செய்ய எத்தனித்ததாகக் காங்கேசன்துறைப் பொலிஸாரால் அவருக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் கோர்ட்டில் விசாரணை செய்தபின் மேல் கோட்டுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ், ஏச், அத்துறுப்பாணை விசாரணை முடிவில் எதிரி குறிப்பிட்ட அருமைநாயகம் என்பவரை கொலை செய்யும் நோக்கத்துடன் அவரைத் தாக்கினார் என்று தீர்மானிக்கப் போதிய சாட்சியமில்லையென்றும் கொடுவாக்கத்தியால் வெட்டி பலத்தகாயம் ஏற்படுத்தியகுற்றத்துக்காகவே மேல் கொட்டுக்கு வழக்கைப் பாரப் படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

## 'பாட்மின்டன் போட்டி முடிவுகள்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட பாட்மின்ரன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் சுற்றுப்போட்டியை போட்டி நேற்று நடைபெற்ற முடிவுகள் விபரம் வருமாறு:-

பெண்கள் தனி (செமிபைனல்):- செல்வி உமையாள் இரத்தினசிங்கம், செல்வி பி. வயிரமுத்துவை தோற்கடித்தார் (11-4, 11-4)

ஆண்கள் தனி (செ. பை):- 1 திரு. பி எஸ். தம்பையா, திரு. வி. [illegible]வை தோற்கடித்தார். (11-15, 15-7, 15-6)

2 திரு. டபிள்யு வி, ரெஜினல்ட் ஆட்டத்தில் கலந்து கொள்ளாததால் திரு என், சுகுமார் வெற்றிபெற்றார்.

மாவட்ட பெண்கள் (தனி)

1 திருமதி எச். ஜே. பலபலாறு. செல்வி உமையாள் இரத்தினசிங்கத்தை தோற்கடித்தார். (11-1, 11-6)

2 செல்வி யோகமலர் வின்சிலோ, செல்வி புஷ்பதேவி எட்வார்ட்டை தோற்கடித்தார் (11-5, 11-6)

மாவட்ட இரட்டையர் ஆட்டம் (குவாட்டர் பைனல்வி):-

1 திரு என். பி, சேகரமும் திருமதி எச். ஜே. பலபலாறுவும் திரு, என். சிவபாதத்தையும் செல்வி மீனாட்சிசுந்தரத்தையும் தோற்கடித்தனர்; (15-11, 18-14)

2 திரு. அன்ரன் பிலிப்பும், செல்வி யோகமலர் வின்சிலோவும, திரு கே. சிவபாதசுந்தரத்தையும் செல்வி ரஞ்சினி சபாரத்தினத்தையும் தோற்கடித்தனர். 15-9, 11-15, 18-16)

3 செல்வி ஆர். பி. நடராசாவும் செல்வி புஷ்பதேவி எட்வார்டும், திரு. கே. எஸ். நடராசாவையும் செல்வி என், ஞானசுந்தரத்தையும் தோற்கடித்தனர். (15-4, 15-4)

மாவட்ட இரட்டையர் ஆட்டம் (செ. பை):-

திரு, அன்டன் பிலிப்பும் செல்வி யோகம்மா வின்சிலோவும் ஆட்டத்தில் கலந்து கொள்ளாமையால் திரு. கே. எஸ். நடராசாவும் செல்வி எட்வார்டும் வெற்றி பெற்றனர்.

## இந்து சமுத்திரத்தின் வயது 13 கோடி ஆண்டுகள்

லண்டன், ஏப், 25

இந்து மகாசமுத்திரத்தில் இன்று ஆழ்ந்து கிடக்கும் சில நிலப்பகுதிகள், 13 கோடி ஆண்டுகளுக்கு முந்தியவை என்பதை நிரூபிக்கக்கூடிய ஆதாரங்களை இப்போது இக்கடலில் ஆராய்ச்சி நடத்திவரும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

இந்தியப் பெருங்கடலில் இப்போது நடைபெற்று வரும சர்வதேச ஆழ்கடல் ஆராய்ச்சிகளில் 20 நாடுகளைச் சேர்ந்த 40 கப்பல்கள் பங்குகொண்டு வருகின்றன. இவற்றில் "மீடியர்" என்ற ஜெர்மன் கப்பலும்ஒன்று. இக்கப்பல், இந்தியக்கப்பல் "கிருஷ்ணா"வின் உதவியுடன் பம்பாய்க்கும் கராச்சிக்குமிடையே ஆழ்கடல் பாறைகளின் அமைப்புபற்றி ஆராய்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து சிந்துநதி மூலமாக ஆண்டுதோறும் சராசரி 44.6 லட்சம் தொன் வண்டல் கடலில்போய்ச் சேருகிறது. இந்த வண்டல், கடலில் எங்கே படிந்திருக்கிறது என்பதையும் ஜெர்மன் கப்பல் கண்டுபிடிக்க முயன்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஒருபோதும் நான் வகுப்புவாதியாக இருந்ததில்லை”

— பிரதமர் டட்லி

## தமிழரசு ஆதரித்திருந்தால் நிலைமை மாறியிருக்கும் —என். எம்.

கொழும்பு, ஞாயிறு

சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது ஜனப்பிரதிநிதிகள் சபையில் சென்ற வாரம் விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய முக்கிய கட்சித் தலைவர்களின் கருத்துக்களை இங்கு சிறிது விபரமாகக் காணலாம். உடனுக்குடன் ‘ஈழநாடு’ பத்திரிகையில் பார்லிமெண்ட் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் சுருக்கமாகத் தொகுக்கப்பட்டிருந்தன. எனினும் இறுதிநாள் விவாதத்தில் பேசிய கட்சித் தலைவர்களின் பேச்சுகள் விபரமாக வெளியிட முடியாது போனதால் அவை இன்று இங்கு கொடுக்கப்படுகின்றன.

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் கூறியதாவது:-



பிரதமர் பதவியிலிருந்து முன்னுள் பிரதமர் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் ராஜினமாச் செய்திருக்க வேண்டும் என்று முறை கூறுகிறுர்கள் உடனடியாக ராஜினமாச் செய்யாததற்குக் காரணம் எந்த ஒரு கட்சிக்கும் மெஜாரிட்டிப் பலம் கிடையாமல் போனதும், தமிழரசுக்கட்சி தலைவர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்புவதில் ஏற்பட்ட தாமதமும்தான். இதற்கிடையில் நாம் திரு எம். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டிருந்தோம். அவரும் தமது தலைவர் இன்னும் கொழும்பு திரும்பவில்லையெனவும் அவர் வந்ததும் தொடர்பு கொள்ளுவதாகவும் கூறியிருந்தார். ஆனால் இது நடைபெறவில்லை.

1960 தேர்தலுக்குப் பின்னர் தமிழரசுக்கட்சி சுதந்திரக்கட்சியை ஆதரித்ததுமாதிரி இப்போதும் ஆதரித்திருந்தால் நிலைமை மாறியிருக்குமல்லவா? இதனுல்தான் அரசாங்கம் ராஜினமாச் செய்வதில் தாமதித்தது.

தற்போதைய பிரதமர் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்தபோது தேர்தலில் தோல்வியுற்றவர்களை அரசாங்க கார்ப்பரேஷன்களுக்கு நியமிப்பதைக் கண்டித்தார். இப்போது அதே பிரதமர்களின் தொகுதியில் யு. என். பி. சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த திரு. ஏ. டபிள்யூ. அபயகுணசேகராவை துறைமுகக் கார்ப்பரேஷன் டைரக்டராகவும் மற்றும் தேர்தலில் தோல்வியடைந்தவர்களான மேஜர் வி. ஏ. தர்மபாலா, டைான்லி ரத்வத்தை, விஜேரா போல் றவர்களை இ. பே. சபைக்கும் நியமனம் செய்திருக்கிறது.

### தமிழரின் உரிமை

சிறுபான்மையினத்தவர்களுடைய உரிமைகளை நாம் ஏற்றுக்கொள்கிறேம். ஆனல் தமிழரசுக்கட்சியின் அரசியல்சந்தர்ப்பவாதத்தைத்தான் நாம் எதிர்க்கிறேம். தமிழர்களுக்கு நாம் சலுகைகள் செய்யவில்லையா? சட்டங்களைத் திருத்துவதற்குக்கூட நடவடிக்கையெடுத்தோம். நல்லூர் தொகுதி அங்கத்தவருடைய மகன் அரசாங்க சேவையிலிருப்பதற்காக நான் சட்டத்தைக்கூடத் திருத்தியிருந்தேன், இதை மறுக்கட்டும் குறிப்பிட்ட சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென என்னிடம் கோருவதற்காக நாகநாதனுடைய குடும்பமே என்வீட்டுக்குவந்திருந்தது, தமிழர்களுக்கோ தமிழர்களுடைய பிரச்னைகளுக்கோ நாம் எதிராகவிருக்கவில்லை. உரிமை சன்வழங்கபடுவதை நாம் வரவேற்கிறேம் (கரகோஷம்).

யாழ்ப்பாணத் தொகுதி எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-



எனக்கு முன்னர் பேசிய எட்டியாந்தோட்டைப் பிரதிநிதியை எனக்குப் புரிந்த ஆங்கிலத்திற் பேசும்படி கேட்டும் அது பலன்தரவில்லை.

தனிப்பட்ட கட்சி ஒன்றுக்கு மெஜாரிட்டி பலம் கிடையாத போதிலும் ஆட்சியிலிருந்த கட்சிக்கு பலம் கிடையாமல் போனதையறிந்திருக்கவேண்டும். தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகத்தான் அரசாங்கம் ராஜினமாச் செய்வதற்குத் தாமதித்ததென்றல் அவர்களுடையதும் சந்தர்ப்பவாதமா? என்ன? இதை எடுத்துச் சொல்லட்டும்,

இந்த அரசாங்கம் 9 வருடங்களுக்குப் பின்னர் பதவிக்கு வந்திருக்கிறது; இந்தக் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. வாழ்க்கைச் செலவு வானைத் தொடுகிறது. வெளிநாட்டு மூலதனம் கரைந்துவிட்டது. திறைச்சேரியில் பணமே இல்லை, அரசியல் நிலை மோசமடைந்துவிட்டது. பொருளாதாரம் ஸ்திரமற்று வேலை நிலையிலுள்ளது. இந்த நிலையில் தான் தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது,

தம்பதெனியா எம். பி. திரு, ஆர். ஜி. சேனநாயக்கா இச்சபையில் பேசுகையில் வகுப்புவாதத்துக்கு வித்திட்டார், கிறிஸ்தவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், இந்தியர்கள் இந்நாட்டுக்குச் சொந்தமானவர்களில்லையென்ற தொனியில் பேசினர். மொழி சமய அடிப்படையிலுள்ள சிறுபான்மையினத்தவர்கள் இந்த நாட்டுப் பிரஜைகளில்லையா? அவர்கள் வாக்களிக்கக் கூடாதா? தமக்கு விரும்பிய அரசாங்கத்தை தெரிவு செய்யக்கூடாதா? இப்படியான கொள்கையையுடைய உம்மைப்போன்றவர்களினுல்தான் இந்தத் தேசிய அரசாங்கம் இன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

உண்மையில் தனிப்பட்ட முறையில் பம்பதெனியா பிரதிநிதிக்கு கத்தோலிக்கர்களிடம் வேற்றுமை கிடையாது‘ அரசியல் காரணங்களுக்காகத்தான் வெறுக்கிறர்.

1960-ம் ஆண்டில்கூட முன்னுள் பிரதமருக்கு கூட்டரசாங்கம் அமைக்கும் அதிகாரத்தை மக்களோ வாக்காளர்களோ கொடுத்தல் கிடையாது.

எனது கட்சிக்கும், ஐ. தே. கட்சிக்குமிடையில் எப்படியான ஒப்பந்தம் என்று கேட்டார்கள், சென்ற 25 வருடங்களிலும் நான் ஐக்கியத்தை விரும்பும் கட்சிகளையே ஆதரித்துவந்தேன். ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதையே எனது கட்சி ... கொள்கையாகக் கொண்டிருந்தது ... ... ... திலேயே நான் ஜனநாய கத்தை ஆதரித்தும் சர்வாதிகாரத்தை எதிர்த்தும் நிற்கும் சக்திகளுடன்தான் நாம் சேருவோமென பகிரங்கமாகவும்‘ தயக்கமின்றியும் அறிவித்திருந்தேன்,

இந்த நாட்டுப் பிரஜைகளாக எவராவது வந்துவிட்டால் அவர்களுக்கு சகல உரிமைகளும் இருக்கவேண்டும் அதுதான் நியதிக்கமைந்தது.

### மொழிப்பிரச்னை தீர்வு என்ன

சென்ற நான்கு தினங்களிலும் எதிர்க்கட்சியினர் எவராவது மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது எப்படி என்பதை இங்கு கூறியது கிடையாது, இந்தப் பிரச்னைகளோதான் சென்ற 9 வருடங்களிலும் அரசாங்கம் இயங்கியிருக்கிறது. தமிழ் பேசும மக்களுடைய பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. ஆனல் பிரச்னை தீர்க்கப்படாமல் பின்போடப்பட்டுவந்திருக்கிறது.

உண்மையில் இந்தியர் பிரச்னையைக்கூட தீர்க்க விரும்பியிருந்தால் தீர்த்திருக்கலாம். மொழி ஒரு இனத்தின் உரிமைக்குரல். சிங்களவருக்குச் சிங்களம் எப்படியோ அப்படித்தான் தமிழ்மக்களுக்குத் தமிழும். மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு காலஞ்சென்ற பண்டாரநாயக்கா இச்சபையில் கொடுத்த உறுதிகளைக் கூட நிறைவேற்றவில்லை.

இலங்கை-இந்தியர் பிரச்னையை விரைவில் தீர்த்தேயாக வேண்டும். 10 லட்சம் மக்களை அநாதைகளாக வைத்திருக்கக்கூடாது, இலங்கைப்பிரஜைகளாக எவரையும் ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கு எல்லா உரிமைகளும் இருக்க வேண்டும். வம்சாவளிப்பிரஜைகளென்றும் பதிவுப்பிரஜைகளென்றும் இரண்டுவிதமான பிரஜைகள் இருக்கக் கூடாது.

நடுநிலைமைக்கொள்கையைப் பற்றிப் பேசும்போது திரு. பொன்னம்பலம் கூறினர்,

இந்தியாவை சீனு தாக்கியபோது அதைப் பகிரங்கமாக அரசாங்கம் கண்டித்ததா? இந்தியாவுக்கு அநுதாபத்தைத் தெரிவிக்கக்கூட முன்வந்ததாகத் தெரியவில்லை.

### மாவட்டசபைகள்

1964-ம் ஆண்டில் சுதந்திரக் கட்சி நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கத்தில் மாவட்டசபைகள் உருவாக்குவதுபற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள், ஆனல் இன்று அதை எதிர்க்கிறர்கள்.

அரசியல் சட்டத்தைத் திருத்தி சிறுபான்மை மக்களுடைய அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பளிப்பதென்ற குறிப்பை நான் வரவேற்றேன்.

## ‘சர்வாதிகாரத்தை நாம் விரும்பவில்லை’

— சிறிமா

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பேசுகையில் கூறியதாவது:



எனது எதிரிகள் நான் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன் என்று சிலர் நாட்டை விட்டு வெளியேறப்போகிறேனென்று கருதினர்கள், ஆனல் நான் இந்த முடிவுக்கு வரவுமில்லை. நாட்டை விட்டு வெளியேறப் போவதுமில்லை. எனது கணவர் விட்டுச்சென்ற சேவையைத் தொடர்ந்து செய்வதற்காகவே நான் அரசியலில் புகுந்தேன். மக்களுடைய ஆதரவுடனும் ஒத்தாசையுடனும் இருந்தது. அரசாங்கத்தையும் அமைத்தேன்,

வாழ்க்கை முழுவதும் பதவியிலிருப்பதற்காகத் தான் அரசியலில் இறங்கியதாகவும் கூறினர்கள். அப்படி நான் எதிர்பார்த்ததுமில்லை. இடதுசாரிக் கட்சியிலிருந்தோ அல்லது அரசாங்கக்கட்சியிலிருந்தோ எனது மக்களுக்குச் சேவை செய்யத் தயாராகவிருக்கிறேன்.

தொழில்மந்திரி பேசும்போது நான் எதிர்க்கட்சியில் அநேக நாட்களுக்கு இருக்கமாட்டேனென்று கூறினர்கள். ஐ. தே. கட்சியினர் இப்படியான சோதிடங்களைக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள். 1956ம் ஆண்டிலும் எனது கணவரைப் பற்றிக் கூறினர்கள். பின்னர் என்ன நடந்ததென்பதை நான் கூறவேண்டியதில்லை,

முன்னேற்றத்திற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எனது கட்சியும் பொதுவில் எதிர்க்கட்சியும் வரவேற்கும். (கரகோஷம்) முதலாளித்துவகோஷ்டிகளுக்கு நமது மக்களை அடிபணியச்செய்ய அரசாங்கம் முயற்சிகளெடுத்தால் அதை சபைக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்த்தே தீருவோம்.

முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட 7 கட்சிகளைக் கொண்டு இந்த தேசிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது, எந்த அடிப்படையில் எந்தக் கொள்கையில் இக்கட்சிகள் தேசிய அரசாங்கம் அமைக்க முன்வந்துள்ளன வென்பதைத் தெரிவிக்கவேண்டும்,

நாம் கூட்டரசாங்கம் அமைத்தபோது பொதுமக்களின் உத்தரவாதமின்றி அமைத்துவிட்டோமெனக் கண்டித்தவர்கள் இன்று தேசிய அரசாங்கத்தை எப்படி அமைத்தார்கள்.

தமிழரசுக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி ஆட்சியொன்றை ஸ்தாபிப்பதே தனது கொள்கையென்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது. இதே போல எம். ஈ. பி, ஜாதிக விமுக்திபெரமுன போன்ற கட்சிகள் எப்படியான கொள்கைகளைக் கொண்டிருந்தனவென்பதும் அறிந்ததே

யு. என். பி. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிங்களம் மாத்திரம் தான் இலங்கையின் தேசியபாஷையென்பதை தெரிவித்திருந்தது. ஆனல் இந்த நிலையேற்பட்டிருப்பதனுல் எந்த அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்பதை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். மகாஜன எக்சத் பெரமுன, ராணுவம் நிர்வாகம் பாடசாலைகள் போன்றவைகளுக்கெல்லாம் பௌத்தர்களே பெரிய பதவிகளை வகுக்கவேண்டுமென்று கூறியிருந்தது. ஆனல் எந்த அடிப்படையில் இன்று ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது.

தேசிய அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு கட்சிகளுக்கிடையிலும் உள்ள முரண்பட்ட கருத்துக்களைப் பார்க்கும்போது அது தேசிய அரசாங்கத்துக்கு உகந்ததாக அமையவில்லை. வங்கிகளையும் ஏஜென்ஸி ஸ்தாபனங்களையும் தேசிய மயமாக்குவதன் மூலம் எமது மக்களின் சொத்துக்களைப் பாதுகாக்கலாம் நாம் இதற்கான நடவடிக்கைகள் எடுத்திருந்தோம், 1956ல் எமது கலைக்கும் கலாசாரத்

(5-ம் பக்கம் பார்க்க)

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களை
வாசனையால் பரிமளிக்கச் செய்யவும்
நறுமணம் கமழும் மனோரம்மியமான
“ராதா”
★ 99 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி
★ 999 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி
★ ஜெகன்மோகன் ஜவ்வாது வத்தி
★ பத்மினி ஜவ்வாது வத்தி
மற்றும்
★ லீலா ஜவ்வாது ★ ஸ்பெசல் அம்பர்
★ இந்திராணி ★ கிறீன் தர்பார்
வத்திகளையே
உபயோகித்து ஆனந்தமடையுங்கள்!
இலங்கையில் முதல்தரமான தயாரிப்புகள்.
எல்லா வியாபாரிகளிடமும்
கிடைக்கும்,
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்:
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைத்திரவிய வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 541, 7068
“பாலேந்திரா பில்டிங்” 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மொழிப்பிரச்னைக்கு எதிர்க்கட்சியினர் தீர்வு வைத்துள்ளர்களா?" —ஜி. ஜி.

(4-ம் பக்க தொடர்ச்சி)

தக்கும் புத்துயிரளித்திருந்தோம்.

## இந்தியர் பிரச்னை

அநேக ஆண்டுகளாக இப்பிரச்னை தீர்க்கப்படாமலேயே இருந்துவருகிறது. இப்பிரச்னைக்குத் தீர்வுகாணுமுகமாகவே இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவுக்கு வந்து ஒப்பந்தமும் உருவானது. பிரதமருடனும் இப்பிரச்னை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுகண்டோம். ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தேசிய அரசாங்கம் அப்படியே அமுல் நடத்துமென எதிர்பார்க்கிறோம்.

இந்திய—சீன எல்லைத்தகராறில் நாம் ஒருதலைப் பட்சமாக நடந்துகொண்டதாக யாழ்ப்பாணம் எம். பி குற்றம் சாட்டினார். அது தவறு. நடுநிலைமைக்கொள்கையை நாம் கடைபபிடித்த படியால்தான் இங்கொரு மகாநாட்டைக் கூட்டி பிரச்னையைப்பற்றிப் பேசி சமரச முயற்சியெடுத்தோம். காலஞ்சென்ற பிரதமர் ஸ்ரீ நேருகூட எமது முயற்சியைப் பாராட்டினதைக் குறிப்பிடவேண்டியுள்ளது.

சீனவுடன் செய்துகொண்ட துறைமுக உபயோக ஒப்பந்தம் பற்றியும் யாழ். எம். பி. குறிப்பிட்டார். அந்த ஒப்பந்தம் பாரதூரமானது ஒன்றாக இருந்தால் அதை தேசிய அரசாங்கம் ரத்துச்செய்துவிடலாம்.

மார்ச் மாதம் 23-ம் திகதி நான் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்யவில்லையென்றும் கூறப்படுகிறது நான் அன்று எனது மந்திரி சபையைக் கூட்டினேன் மற்றக்கட்சிகளின் உதவியுடன் அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க முயற்சிகள் எடுக்கவேண்டுமென சில மந்திரிகள் கேட்டுக் கொண்டதால் ஆராய்வதற்காகத்தான் தாமதமேற்பட்டது. எந்தக்கட்சிக்கும் தனிமையில் மெஜாரிட்டிபலம் கிடைக்காததும் தாமதத்துக்கு ஒரு காரணமாகும்.

சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல அதை நாம் விரும்பவுமில்லை. ஆக ஒன்றரை நாள்வரையில்தான் ராஜினாமாச்செய்ய தாமதப்பட்டது.

ஜனநாயகத்தை பாதுகாக்கவும், ஜனநாயகத்தை வளர்க்கவும் நாம் என்றும் உழைப்போம்.

1962-ம் ஆண்டில் இடம்பெறவிருந்த சதித்திட்டத்தை முறியடித்த படியினால்தான் இன்று நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

தேசப்பற்றுக்கொண்ட அங்கத்தவர்கள் எமது திருத்தங்களை ஆதரித்து வாக்களிப்பார்கள் என்றே நம்புகிறேன்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா பேசுகையில் கூறியதாவது:-



புதிய பிரச்னைகள் புதிய சமூகங்கள், புதிய கூட்டணிகள் ஏற்படுவது சகஜம். அதேபோன்ற ஒன்று இன்று ஏற்பட்டிருக்கிறது. தற்போதைய அரசாங்கம் எப்படி உருவானதென்பதை ஆராய்வோம்; மூன்று வருடமாகப் பத்திரிகைகளை நசுக்கி சர்வாதிகாரத்துக்கு வழிகோலும் திட்டத்திலிருந்துதான் இந்த அரசாங்கம் உருவானது ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே இந்த ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார சுதந்திரம் மற்றச் சுதந்திரங்களைப் போன்று முக்கியமானது. அதைஅடையும்வரையில் நாம் ஓயமாட்டோம். (கரகோஷம்)

இந்தச்சபையில் எதிர்க்கட்சித்தலைவர் பல வருடங்களுக்கு இருக்கவேண்டுமென விரும்புகிறேன். ஏனென்றால் எதிர்கட்சியிலுள்ள சிலருடைய கோரிக்கைகளை ஏற்க மறுத்ததே போதுமானது; முன்னுள் பிரதமரை ராஜினாமாச் செய்யாமல் வைத்திருப்பதற்கு எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் எடுத்த முயற்சிகள் எமக்குத் தெரியும், ஜனநாயகத்துக்கு முரணாக நடக்காமலிருந்ததற்கு எதிர்கட்சித்தலைவருக்கு எமது பாராட்டுதல்கள்.

பல தொகுதிகளையும் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதனால்தான் தேசியஅரசாங்கம் எனப் பெயரிட்டோம்.

ஆர். ஜி. பல ஜாதிகளல்ல நாலு ஜாதிகள்.

டட்லி- அதுவும் சரியானதுதான் (சிரிப்பு)

சுதந்திரக்கட்சி அரசாங்கம் திரு. தொண்டமானை நியமன அங்கத்தவராக நியமிக்கவில்லையா? அதில் திரு. ஆர். ஜி சேனநாயகா அங்கத்துவம் வகிக்கவில்லை. பொதுவில் திரு. தொண்டமான் அரசாங்கத்தில் தம்பதெனியாப் பிரதிநிதி அங்கம்வகித்தாரென்பதை அவரே இன்று மறந்துவிட்டார் (சிரிப்பு)

## ஒப்பந்தம்பற்றி விளக்கம்

கூட்டரசாங்கம் தனது 1964-ம் வருடத்திய சிம்மாசனப்பிரசங்கத்தில் நியாயமான அளவு தமிழ்உபயோகம் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அதேபோன்றதுதான் எமது ஸ்ரீக்கமும்,

திரு பீலிக்ஸ் டயஸ்- எமது பிரசங்கத்தில் 'சிங்களச்சட்டத்திற்குக் கீழ்' என்றிருக்கிறது.

பிரதமர்- இது விதண்டாவதம் (சிரிப்பு) நாம் மசோதா கொண்டுவரும்வரை பொறுத்திருங்கள். அதைச் சிங்களவர்களும், தமிழர்களும் ஏற்றுக் கொள்ளுவார்கள்.

மாவட்டசபைகள் நாட்டை பிரிப்பதற்கு உதவியாக இருக்குமென இப்போது கூறுகிறார்கள்- ஆனால் தமது பிரசாரத்திலும் அதையே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் ஒரு படி முன்னேறியுள்ளோம். அதாவது இந்த மாவட்டசபைகள் மத்தியஅரசாங்கத்தின் கீழ்தான் இயங்கும் என்பதுதான் அது சமஷ்டிக்கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரான திரு திருச்செல்வம் மந்திரிசபையில் இருக்கும்போதே இது கொண்டுவரப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

## என்றுமே நான் வகுப்புவாதியல்ல

இரண்டு சமூகங்களுக்குமிடையில் சமரசத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் என்ன பாதகம் ஏற்பட்டுவிடப் போகிறது.

நான் எனது வாழ்க்கையிலேயே வகுப்புவாதியாக மாறியதில்லை, என்னுடன் மந்திரியாகவிருந்த திரு பொன்னம்பலம் இன்று அத்தாட்சியாகவுள்ளார், இலங்கை பிரஜை ஒரு இலங்கைப் பிரஜையாக விருப்பதையே நான் விரும்புகிறேன் (கரகோஷம்).

இந்தியப் பிரதமருடன் எதிர்க்கட்சித்தலைவர் ஒப்பந்தம் செய்துகொண்டது வரவேற்கத்தக்கது. பேச்சுவார்த்தைகளுக்காக நானும் போயிருப்பேன். பிரதமருடைய நடவடிக்கையால்தான் நான் போகவில்லை. அதாவது பத்திரிகைகளை எடுக்க இங்கு முயற்சிகள் நடைபெற்றபடியால்தான் அதை தடைசெய்வதற்காகவே நான் இங்கிருக்கவேண்டியிருந்தது;

எதிர்க்கட்சியினர்- அது முக்கியமானது.

பிரதமர்- இல்லை. இங்கு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதுதான் அந்தச் சமயத்தில் முக்கியமாகவிருந்தது, பத்திரிகைச்சுதந்திரத்தை இழந்திருந்தால் ஜனநாயகமே அழிந்திருக்கும்,

## இந்தியர் பிரச்னை

இந்தியர் பிரச்னைக்குத் தீர்வு காணும்போது இந்தியா எடுத்துக்கொள்ள சம்மதித்த தொகையினரைவிட இலங்கையில் 1 1/2 லட்சம் இந்தியர்கள் இருக்கப்போகிறார்கள்.

திருமதி பண்டாரநாயக்கா- இலைபற்றி விவாதிக்க இந்தியப் பிரதமர் இங்கு வருவதாக இருந்தார். தெய்வாதீனமாக தமது அரசாங்கம் பதவிக்கு வராமல் போய்விட்டது.

பிரதமர்- ஏன் எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தலாமே.

## நடுநிலைமைக் கொள்கை

நடுநிலைமைக் கொள்கையை நாம் தீவிரமாக கடைப்பிடிக்கிறோம். சச்சரவில் ஈடுபடுவோரையும் கண்டிப்பதே நமது கடமை.

ஏன் சீனவுடன் துறைமுக உபயோக ஒப்பந்தத்தை செய்துகொள்ள வேண்டும்? அதுவும் அதை ரத்துச்செய்வதற்கு ஆறுமாதகால அவகாசம் கொடுக்கவேண்டும்? ஆரம்பத்தில் வர்த்தக கப்பல்களுக்கு வசதியளிக்கப்படவிருந்தது. ஆனால் பின்னர் அதைக்கூட மாற்றிக்கொண்டார்கள்.

எதற்காக இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதென்பதைபற்றி ஆராய்ந்தபின்னர்தான் மேற்கொண்டும் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதுபற்றி தீர்மானிக்கப்படும்.

சந்தர்ப்பம் எனக்கு இந்த தேசிய அரசாகத்தை ஸ்தாபிக்க வழிவகுத்ததற்கு நன்றி கூறவேண்டியவனாவுள்ளேன். இந்த நாட்டில் நிலவிவந்த எல்லா தகராறுகளையும், சமூகவேறுபாடுகளையும், நேர்மையாகவும் நியாயமாகவும் தீர்த்துவைக்க முயற்சிப்பேன் எனது கட்சிக்கு அதிக மெஜாரிட்டி கிடைக்காமல் போனதுகூட இப்பெரும் கைங்கர்யத்தை செய்ய உதவியிருக்கிறது. (கரகோஷம்)

சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையும், சௌஜன்ய சூழ்நிலையும் இல்லாவிட்டால் பொருளாதார சுதந்திரத்தையடைய முடியாது.

இன,மத வேறுபாடுகளின்றி இந்த நாட்டில் வாழும் எல்லாச் சமூகங்களையும் ஒன்றுபடுத்தும் பெரும்பணியை மேற்கொள்ளும் பொறுப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இதை திருப்திகரமாகச்செய்து முடிப்பேனென்ற நம்பிக்கையும் எனக்குண்டு.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)

நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)

வீஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரேலியா) ஜூபிட்டர் (குருநாகலை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்



REGAL – JAFFNA
NOW SHOWING
Anthony Quinn
in
REQUIEM
for a
HEAVY WEIGHT


## வானொலிச் செய்திகள்

கொழும்பு, சனி

பார்லிமெண்டில் எம். பிக்கள் நிகழ்த்தும் உரைகள் மற்றும் பார்லிமெண்ட் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை இலங்கை வானொலி ஒலிபரப்புவதற்கு முன்னர் அவற்றை சபாநாயகர் திரு அல்பேர்ட் பீரிஸ் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கட்சித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.


S. R. S.
ஜவுளி மாளிகையில்
எமது
சொந்த நெசவுத்தறியில்
தயார் செய்யப்பட்ட
★ சேலைகள்
★ பெட்சீட்டுகள்
★ துவாய்கள்
முதலியன
விற்பனைக்கிருக்கிறது.
உங்கள் தேவைகளுக்கு
உடனே விஜயஞ்செய்யுங்கள்!
எஸ். ஆர். செல்லத்துரை
316, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296.



## வரி விளம்பரம்

### காணவில்லை

சிவலை மாவெள்ளை நிறமும், கா. க. என குறியுமுடைய 6 வயது காளை மாடு ஒன்றை காணவில்லை, கண்டுபிடித்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். சீனியர் காராளி, புத்தூர் மேற்கு, நவற்கிரி. 92

### தேவை

காஷியர் தேவை: இருபாலாரும் மக்ரில் விண்ணப்பிக்கவும், பிணைப்பணம் ரூபா 500/- மாதச்சம்பளம் ரூபா 75/- கலாசோதி இன்டஸ்ரீஸ், 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ் நிலையத்திற்கு முன்) 82

### அச்சுக் கோர்ப்பவர் தேவை

அச்சுக் கோர்ப்பவர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித்தகைமை, இத்துறையிலுள்ள முன் அனுபவம் ஆகியவற்றுடன் தங்களது திறமை, முன்வேலை செய்த இடங்கள், கடைசியாகப் பெற்ற சம்பளம் ஆகிய விபரங்களுடன் வேலை செய்த இடங்களிலிருந்து பெற்ற நற்சாட்சிப்பத்திரப் பிரதிகளையும் தங்களது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும், விண்ணப்ப முடிவு திகதி 8-5-65. மனேஜர், ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 90

### விற்பனைக்கு

22 ஸ்ரீ 6553, மொக்கன் மொறிஸ் தொன் 5,6 நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. தேவையுள்ளோர் நேரில் வந்துபார்க்கலாம் ஒக்சிஜீ ஷூஸ், இல: 72, மாளிகாவத்தை ரோட், கொழும்பு-10 94

### நன்றி

சென்ற திங்கட்கிழமை 19-4-65 பொன்னுக்கிருஷ்ணன் கோவிலில் நடைபெற்ற எமது திருமணத்திற்கு நேரில் வந்தும், தபால் மூலம் வாழ்த்தியும் எம்மைக் கௌரவித்த யாபேருக்கும் எமது நன்றியைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம் க. பத்மநாபசர்மா (மலேரியாத்தடை இயக்கம்), மட்டக்களப்பு. விமலாதேவி. 95


## சாஸ்திரி திரும்பினார்

புதுடில்லி, ஏப். 25

நேபாளத்துக்கு விஜயம் செய்த இந்தியப்பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி இன்று மாலை புதுடில்லி திரும்பினார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "கூட்டுறவு இயக்கம்மக்கள் மனதில் பதிந்து விட்டது"

## கட்டடத்திறப்பு விழாவில் எஸ். ஜே. வி.

நல்லூர், திங்கள்

தமிழ்பேசும் மக்கள் மனதில் கூட்டுறவு இயக்கம் நன்ருகப் பதிந்துள்ளது, என்று காங்கேசன்துறை எம். பி. திரு எஸ் ஜே. வி, செல்வநாயகம் அளவெட்டியில் நடைபெற்ற பலநோக்க கூட்டுறவுச் சங்கப் புதியகட்டிடத்திறப்பு விழாவில்பேசும்போது கூறினர்.

அளவெட்டி பலநோக்க கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டிடத்தை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு எச், எஸ், வனசிங்காவும் திரு. செல்வநாயகமும் சேர்ந்து திறந்து வைத்தனர்.

திரு வி, பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில்திரு, செல்வநாயகம் மேலும் பேசுகையில் கூட்டுறவு நிலையங்களை தேவாலயம் போலக் கருதி நேர்மையுடன் செயலாற்ற வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும், எனக்குறிப்பிட்டனர்'

வலி வடக்கு காரியாதிகாரி திரு டி, முருகேசபிள்ளை பேசியதாவது;

பல வருடங்களாக எதிர்க்கட்சியிலிருந்த திரு. செல்வநாயகம் தற்போது தேசிய அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புக் கொடுப்பது தமிழ் மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஓர் சின்னமாக இருக்கின்றது,

பெரிய கிராமங்களில் பெரிய இயக்கங்கள் வளர்ச்சி அடைவது முன்னேற்றத்திற்கு ஏற்றதாக இருக்கும், கிராமத்தை பிளவு படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது,

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு ஏச். எஸ், வனசிங்கா பேசியதாவது:

தனியே விளைபொருட்களை மட்டும் விற்பனை செய்வதோடு கூட்டுறவுச் சங்கங்கள் நிற்கக்கூடாது. கிராம மக்களுக்கு உதவக்கூடிய அடைவு கடன், வேளாண்மைக் கடன், வங்கி வசதிகள் என்பன வற்றையும் பலநோக்கச் சங்கங்கள் கொண்டிருக்க வேண்டும். புதிதாக இப்பகுதியில் புதிய கடமை ஒன்று உண்டு, அகில இலங்கையிலுமுள்ள கிராமங்களில் எட்டுச் சங்கங்களுக்கு மட்டும் தான் இத்தகைய வசதிகள் செய்யப்பட்டிருகின்றன. இதில் சேமிப்பு வங்கியை வளர்க்கக்கூடியது, அரசாங்கக் கடனில் நம்பியிராது, சொந்தமுதலிலே வசதிகளை செய்யக்கூடிய நிலையைச் சேமிப்பு ஏறபடுத்தும்,

திரு வி, பொன்னம்பலம் பேசுகையில் அளவெட்டி கிராமத்திற்கு மின்சாரவசதி, தொலைபேசித் தொடர்பு என்பன உடனடியாகக் கிடைக்கக்கூடிய வசதியைச் செய்யும்படி கூட்டுறவு ஆணையாளரைக் கேட்டுக் கொண்டார்.

மற்றும்பலர் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## கல்வித்தரம்பற்றி எம். பி. கருத்து

நல்லூர், திங்கள்

"நாட்டின் கல்வித்தரம் பெற்றேரினதும் ஆசிரியர்கள், பாடசாலை ஊழியர்களினதும் நல்லெண்ணத்திலேதான் தங்கியுள்ளது" என்று சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம் நேற்றுப் பகல் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினர்

வட இலங்கை பாடசாலை ஊழியர் சங்கத்தின் ஆண்டு விழா திரு க நடராசா தலைமையில் நடைபெற்றது திரு வி என் நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

பாடசாலை ஆசிரியர்களும் ஊழியர்களும் பரஸ்பரம் அன்புடன் பாடசாலை வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும், பாடசாலையில் கல்வித்தரம் பிள்ளைகளின் நலனுக்காக பெற்றேருடன் செளஜன்ய மனோபாவத்துடன் செயலாற்ற வேண்டும்

பாடசாலை ஊழியர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகள பல அவர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தீர்த்து வைக்க என் கட்சியினதும் மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஆதரவு உண்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிப ,திரு என் சபாரத்தினம் பேசியதாவது:-

மனிதாபிமானத்துடன் ஒவ்வொருவருடைய பிரச்னைகளும் அணுகப்படவேண்டும் தம்மை எதிர் நோக்கும் பிரச்னைகளை நாமே தீர்க்கவேண்டும் பிறரின் உதவியை ஒருபோதும் நம்பியிருக்க முடியாது

பல பிரேரணைகள நிறைவேற்றப்பட்டன பலர் உரையாற்றினர்

# "இசைச் சங்கங்கள் சேர்ந்து இசைமன்றம் நிறுவவேண்டும்"

## இசைவிழாவில் காரியாதிகாரி கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது இசையில் மக்களுக்குள்ள ஆர்வம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இந்த ஆர்வத்திற்கு ஆதரவு கொடுக்கும் வகையில் இங்குள்ள இசைச்சங்கங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து, அரசாங்கத்தின் ஆதரவுடன் ஒரு பொது இசைமன்றம் நிறுவி, அதன் மூலம் இசைவல்லுனர்களுக்குப் பட்டம் வழங்கவேண்டும் என்று நேற்று முன்தினம் மாலைநடைபெற்ற ரஸிகரஞ்சன சபாவின் 14-வது ஆண்டு நிறைவு விழாவின் 6-வது நாள் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிப் பேசிய யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் கூறினர்.

திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது:-

தற்பொழுது இங்கு சிரேஷ்ட வகுப்புவரைதான் சங்கீத வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. மக்களுக்கு சங்கீதத்திலுள்ள ஆர்வத்திற்கு ஊக்கமளிக்க இவ்வகுப்புக்கள் மேலும் விருத்தியடையவேண்டும். இங்குள்ள பேராசிரியர்களைக்கொண்டு இவ்வகுப்புக்களை நடத்துவதோடு பிறநாட்டிலிருந்தும் பேராசிரியர்களையும் வரவழைக்கவேண்டியது அவசியமாகும். சங்கீதத்தில் சிறந்தவர்களுக்கு யாழ்ப்பாணத்திலேயே பட்டங்கள் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்,

யாழ்ப்பாணத்தில் உள்ள கலைஞர்கள் வானெலி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற கொழும்பு செல்ல வேண்டிய நிலையிலிருக்கிறர்கள். இந்த நிலைமாற வேண்டும். யாழ்ப்பாணத்திலேயே ஒரு ஒலிபதிவு நிலையம் நிறுவபபடவேண்டியது அவசியம். யாழ்ப்பாணத்திலிருந்து கலைஞர்கள் பல மைல் தூரம் பிரயாணம் செய்து, வானெலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதால் சோர்வடைந்து விடுகிறர்கள். ஆதலால் யாழ்ப்பாணத்தில் ஒலிப்பதிவுநிலையமிருந்தால், அவர்கள் சிறந்த கலைநிகழ்ச்சிகளை வழங்க வசதியாயிருக்கும். அத்துடன் தமிழ் மக்களின் கலைகளை வளர்ப்பதாயிருக்கும்.

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் இன்று திருநாவுக்கரசு நாயனார் குரு பூசை நடைபெறும். காலை 7 மணிக்கு அபிஷேகம்.

மாலை 6 மணிக்கு ஸ்ரீ சி, எஸ் எஸ் மணிபாகவதர் 'மருள் நீக்கியார்' என்னும் பொருள்பற்றிச் சங்கீத கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

மாலை 7 மணிக்கு நால்வர் உற்சவம் நடைபெறும்.

## உதவி அரசாங்க அதிபர் இடமாற்றம்

நல்லூர், திங்கள்

யாழ், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பெருமையினர் அடுத்த மாதம் மட்டக்களப்புக்கு மாற்றஞ்செய்யப்படவிருக்கிறர், உதவி அரசாங்க அதிபராக கிழக்கு மாகாணத்திலிருந்து திரு, சபாரத்தினம் வரவிருப்பதாக அறியப்படுகிறது.

## "உரிமைகளைப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கருதுவார்களானல் அது பெரும் ஏமாற்றமாகும், இன்று தென்னிலங்கையில் கல்வி கற்று வேலையில்லாமல் கஷ்டப்படும் வாலிபர்கள் தொகை அதிகம். இலவசக் கல்வி கிடைத்ததும் சிங்கள மக்கள் கல்வி அறிவு பெறும் வாய்ப்பு அதிகம் கிடைத்தது அதனல் அநேகர் இன்று முன்னேறியுள்ளனர், எமது தமிழ் சமுதாயம் உடல் உழைப்பில்மட்டு மேமுன்னேற வேண்டும், கல்வியை அதற்கேற்ப ஆக்கிக்கொள்ளவேண்டும், மாவட்டசபைகள் விரைவில் உருவாக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது, இதனுல் அதிக வசதிகளை தாங்களே தங்களுக்கு அமைத்துக்கொள்ளலாம், எமது வாலிபர்கள் கைத்தொழிலில் முன்னேறுவதற்கு பின்னிடைவதற்கு உரியகாரணம்தேவையான கல்வியை கொடுக்காததேயாகும், ஆண்கள் மட்டும் வேலைபார்த்து பெண்கள் வீட்டு வேலைபார்த்தால் மட்டும் போதும் என்று இருந்தகாலம் மாறிவிட்டது,

நாம் கடந்த ஒன்பது ஆண்டுகளாகப்பட்ட கஷ்டம் நீங்கி ஓரளவாவது நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இன்று உண்டு பாராளுமன்ற சிம்மாசனப்பிரசங்கத்துக்கு பதிலிறுத்துப் பேசும்போது பிரதமர் டட்லி சேனநாயகா கூறியவார்த்தைகள் எமக்கு நன்மை பயப்பதும், நல்ல தருணமும்மாகும்,

பல்கலைக்கழக உப விரிவுரையாளர் திரு இ. நித்தியானந்தன், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி உதவி அதிபர் திரு. க, கயிலாயநாதன், க. குலசூரியன் ஆகியோர் பேசினர், சங்கசெயலாளர் ஆ ஸ்ரீபத்மநாதன் சங்க அறிக்கையை வாசித்தார், என். சந்திரராசா கோஷ்டியினரின் வாத்திய இசைக்கச்சேரியும் யாழ்.மறுமலர்ச்சி நாடக மன்றத்தினரின் 'மனு நீதி கண்ட சோழன்', 'சந்திப்பு' என்ற இரண்டு நாடகங்களும் நடைபெற்றன.



# "முதலில் துறைமுகப்பாலம் அமைப்பது அவசியம்"

## காங்கிரஸ வாலிபமுன்னணி கோரிக்கை

காங்கேசன்துறை ஞாயிறு

"சிமிந்தி தொழிற்சாலை அபிவிருத்திக்கும், ஆண்டுதோறும் அரசாங்கம் நஷ்டம் அடைந்துவரும் கோடிக்கணக்கான ரூபாய்களை மிச்சப்படுத்தவும் காங்கேசன்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் அபிவிருத்தி வேலைகளுக்கு முன்னேடியாக இத்துறைமுகத்தில் துறைமுகப் பாலமொன்றினை உடனடியாகநிறுவ நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக்கிளை பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகாவிடம் கோரியுள்ளது.

## வாலிப முன்னணி கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் வண்ணர்பண்ணை கொட்டடி வாலிப முன்னணிப் பொதுக்கூட்டம் அதன் அலுவலகத்தில் திரு வி எம் செகலப்பா தலைமையில்கூடியது இக்கூட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதிநிதியாகிய திரு ஜி ஜி பொன்னம்பலத்துக்கு வாலிப முன்னணி சார்பில் ஓர் பகிரங்க வரவேற்புக்கொடுப்பது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது வாலிப முன்னணி உத்தியோகஸ்தர் தேர்வின் போது பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

பாதுகாவலர்: திரு ஜி ஜி பொன்னம்பலம், உபபாதுகாவலர்: திரு எம் எஸ் சுந்தரலிங்கம், திரு டபிள்யு ஈ டி மேதர், திரு கந்தசாமி, திரு ஆர் விசுவநாதன், திரு டி கணேசலிங்கம், தலைவர்: செல்வன் ந சந்திரசேகரம், உபதலைவர்: செல்வன் ச செந்தில்ராசா, இணைச்செயலாளர்கள்: செல்வன் த மகேந்திரராசா, திரு கே இரத்தினவேற்பிள்ளை உப இணைச் செயலாளர்கள்: செல்வன் ஏ எல குணரத்தினம், செல்வன் த விநாயகமூர்த்தி, பொருளாளர்: திரு வி எம் செல்லப்பா மற்றும் 14 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்

## தபால்நிலையம்

காங்கேசன்துறை, ஞாயிறு

புதிய தபால் நிலையத்திற்கு ஒரு இடம் ஐந்து வருடங்களுக்கு முன்பே அரசாங்கத்தால் வழங்கப்பட்டபோதிலும் காங்கேசன்துறை தபால் கந்தோரில் கடமையாற்றும் ஊழியர்கள் சுவாசிக்க இடமில்லாத நெருக்கடிக்குள் இருந்து வேலை செய்கிறர்கள். என்றும் தபால் ஆபீசுக்கு செல்லும் பொது மக்கள் வெய்யிலிலும், மழையிலும் நின்று தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சென். அன்ரனிஸ் சனசமூக நிலையம்

பூநகரி, ஞாயிறு

குமுளமுனை - சென். அன்ரனிஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் மேற்படி நிலையமண்டபத்தில் திரு. கி. அவுஜும்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர்தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர்: திரு. கி, அவுஜும்பிள்ளை, உபதலைவர், திரு. அ தேவசகாயம்பிள்ளை, காரியதரிசி; கி. இராமசாமி, உப காரியதரிசி: கு. பத்திநாதன், தனாதிகாரி: அ. சாமிநாதன், நிர்வாகஉறுப்பினர்களாக திருவாளர்கள் அ. குடியப்பு, க. தம்பிராசா, கு, சாமிநாதன் அ.மக்கேரியசர்.

## 'மரவரி முறையை நீக்குக'

யாழ்ப்பாணம், திங்கள்

பிரதமருக்கும் வடபகுதி அரசாங்க அதிபருக்கும் வடமாநில சைவ இளைஞர் மாமன்றம் அனுப்பிவைத்துள்ள செய்தியில இலங்கையில் மற்றைய மாகாணங்களில் மரவரிமுறை இல்லாதிருக்கின்றது. வட மாகாணத்தில் மட்டும் மரவரி முறையை வைத்திருப்பதை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளது.

மரவரி முறையால் வடமாகாணத்தில் மதுபானக்கடைகள் அதிகரித்துவருகின்றன இதனல் ஆண்களைப் பெண்களும் சிறுபிள்ளைகளும் குடிபோதையில் ஈடுபடுகின்றனர்கள் இம்மாகாணத்தில்குடிப்பழக்கம் மேலும் மேலும் அதிகரித்து பலவிதமான குற்றச்செயல்களுக்கும் காரணமாகின்றது. இவ்வித குற்றச்செயல்கள் அதிகரித்தமைக்கு மரவரிமுறையே காரணமாகும் என உயர்தர நீதிபதிகளே கூறியிருக்கிறர்கள். இங்குள்ள மரவரி முறையை நீக்கி மதுபானத்தடையை படிப்படியாக அமுலுக்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

## வரவேற்பு விழா

கரவெட்டி, ஞாயிறு

நெல்லியடிபட்டினசபையைச் சேர்ந்த கலட்டி வட்டாரமக்களால் உடுப்பிட்டித்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு, சிவசிதம்பரத்திற்கு சென்றசனிக்கிழமை வரவேற்பு விழாவடமராட்சிகாரியாதிகாரி திரு ஜே டி ஆர்னல்ட் தலைமையில் நடாத்தப்பட்டது

## சீட்டிழுப்பு மூலம் நியமனம்

மீசாலை, ஞாயிறு

சாவகச்சேரி நகரசபைக் காவலாளி ஒருவரைத் தெரிவு செய்வதைப்பற்றி நேற்று நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தலைவர் சபைக்கு அறிவித்தபோது, 10-ம் வட்டார அங்கத்தவர் திரு, க, கனகரத்தினம் சபையின் நியமனங்கள அரசியல் கண்ணேட்டத்துடன் நடைபெற்றுவருவதாக பரவிவரும் கதைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்நோக்கமாக இந்நியமனங்கள் சீட்டிழுப்பு மூலம் நடைபெற வேண்டுமெனத் தலைவரைக் கேட்டுக்கொண்டார், அத்துடன் காவலாளி விண்ணப்பம் செய்த அத்தனை விண்ணப்பகாரர்களையும் அழைத்து பகிரங்கமாக சீட்டிழுபடவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இதைச்சபை ஏற்றுக்கொண்டது,

இன்றைய கூட்டத்தில் முற்கூட்ட அறிக்கையை அங்கீகரிக்கும் தருணத்தில் அங்கீகரிகளுக்கிடையில் காரசாரமான பேச்சுக்கள் இடம்பெற்றதால் தலைவர் பல முறை அங்கத்தவர்களை எச்சரிக்க வேண்டியநிலை வந்தது.

8-ம் வட்டார அங்கத்தவருட் முன்னைநாள் சாவகச்சேரி பட்டினசபைத் தலைவருமான திரு, கி.க. பாலசுப்பிரமணியத்தின் பிரேரணையைத்தொடர்ந்து சங்கத்தானை, கட்டுக்காணி புகையிரத நிலையங்களின் பிளட்போம்களை தற்பொழுது உள்ள நிலங்களுக்கு மட்டும் உயர்த்தி பிரயாணிகள் கஷ்டமில்லாமல் இறங்குவதற்குஉயர்த்தி கட்டவேண்டும் என்ற பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு புகையிரதப் பகுதிக்கு அறிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org